Tamil

singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# Maria Taniguchi: Afterimage

24.7 – 22.11 2026

மரியா டானிகுச்சி: ஆஃப்டர்இமேஜ் என்பது, சிங்கப்பூர் அருங்காட்சியகம் ஒன்றால் காட்சிப்படுத்தப்படும், புகழ்பெற்ற அந்த ஓவியரின் முதல் தனிப்பட்ட கண்காட்சியாகும். நமது பார்வைப் புலனில் நிலைத்திருக்கும் காட்சிப் பதிவுகளின் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ள இக்கண்காட்சி, அவரது பரந்த படைப்புச் செயல்பாட்டில் மீண்டும் மீண்டும் இடம்பெறும் கருப்பொருள்களான மீண்டும் நிகழ்தல், காலம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்கிறது. இந்தக் கண்காட்சி, டானிகுச்சியின் “செங்கல் ஓவியங்கள்” (brick paintings)(2008—தற்போதுவரை) என்பவற்றால் மையப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில், நிறம் மற்றும் அளவுகளில் ஏற்படும் நுட்பமான மாற்றங்கள் காலப்போக்கில் இனைந்து உருவாக்கப்படுகின்றன. இந்த உயரமான கேன்வாஸ் ஓவியங்களுடன் சேர்த்து, ஆஃப்டர்இமேஜ் கண்காட்சி, ரன்அவேஸ் (Runaways) என்ற தொடரின் புதிய பதிப்பையும் வழங்குகிறது. இது நேர்கோடுகள் மற்றும் வட்டங்களால் ஆன மரச் சிற்பங்களின் தொகுப்பாகும், இவை முப்பரிமாண வரைபடங்களாகச் செயல்படுகின்றன. 2010 முதல் 2026 வரையிலான காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட நான்கு காணொளிப் படைப்புகள் இந்தக் கண்காட்சியை நிறைவு செய்கின்றன. அவை, டானிகுச்சியின் இடம், காலம் மற்றும் கலைப் படைப்புச் செயல்முறை ஆகியவற்றுடனான உறவை மேலும் தெளிவுபடுத்துகின்றன.

1 ஃபிகர் ஸ்டடி
2012
ஒற்றை-அலைவரிசைக் காணொளி (கருப்பு-வெள்ளை, ஒலி), 37:12 நிமிடங்கள்
கலைஞரின் தொகுப்பு

2 ஃபிகர் ஸ்டடி
2018
ஒற்றை-அலைவரிசைக் காணொளி (வண்ணம், ஒலி), 3:51 நிமிடங்கள்
கலைஞரின் தொகுப்பு

3 மீஸ் *421*
2010
ஒற்றை-அலைவரிசைக் காணொளி (கருப்பு-வெள்ளை, ஒலி), 4:06 நிமிடங்கள்
கலைஞரின் தொகுப்பு

4 தலைப்பிடப்படாதது
2022
கேன்வாஸில் அக்ரிலிக்
228.5 × 114.5 செ.மீ.
மார்கரெட் வாங்கின் தொகுப்பு

5 தலைப்பிடப்படாதது
2018
கேன்வாஸில் அக்ரிலிக்
290 × 791.5 செ.மீ.
கலைஞரின் சேகரிப்பு

6 தலைப்பிடப்படாதது
2023
கேன்வாஸில் அக்ரிலிக்
274 × 488 செ.மீ.
கலைஞரின் சேகரிப்பு

7 தலைப்பிடப்படாதது
2022
கேன்வாஸில் அக்ரிலிக்
228.5 × 114.5 செ.மீ.
பியா கமாச்சோவின் (Bea Camacho) சேகரிப்பு

8 தலைப்பிடப்படாதது
2026
கேன்வாஸில் அக்ரிலிக்
213 × 121 செ.மீ.
கலைஞரின் சேகரிப்பு

9 தலைப்பிடப்படாதது
2025
கேன்வாஸில் அக்ரிலிக்
305 × 213.5 செ.மீ.
டானோட்டோ குடும்பத் தொகுப்பு

10 ஏ பெயிண்டர், இஃப் பிளாக் வெர் ஏ பிளேஸ்
2026
ஒற்றை-அலைவரிசைக் காணொளி (வண்ண, ஒலி), 1:52 நிமிடங்கள்
சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தால் ஆணையிடப்பட்டது

11 தலைப்பிடப்படாதது
2025
கேன்வாஸில் அக்ரிலிக்
228.5 × 114.5 செ.மீ.
நடாஷா சித்தார்த்தாவின் (Natasha Sidharta) தொகுப்பு

12 தலைப்பிடப்படாதது
2023
கேன்வாஸில் அக்ரிலிக்
228.5 × 114.5 செ.மீ.
வீர் கோடக்கின் (Vir Kotak) தொகுப்பு

13 தலைப்பிடப்படாதது
2021
கேன்வாஸில் அக்ரிலிக்
274 × 121 செ.மீ.
கலைஞரின் சேகரிப்பு


14 தலைப்பிடப்படாதது
2017
கேன்வாஸில் அக்ரிலிக்
275 × 484.5 செ.மீ.
சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தின் தொகுப்பு

15 தலைப்பிடப்படாதது
2022
கேன்வாஸில் அக்ரிலிக்
228.5 × 114.5 செ.மீ.
மான்சூன் தென்கிழக்கு ஆசியத் (Monsoon Southeast Asia) தொகுப்பு

16 தலைப்பிடப்படாதது
2026
கேன்வாஸில் அக்ரிலிக்
305 × 518 செ.மீ.
தனியார் சேகரிப்பு, நன்றி: தி ஹெலர் குரூப் (The Heller Group) ஜப்பான் ஜி.கே.

17 தலபைப்பிடப்படாதது
2026
கேன்வாஸில் அக்ரிலிக்
213 × 121 செ.மீ.
கலைஞரின் சேகரிப்பு

18 ரன்அவேஸ்
2026
துஹாட் மரம்
அளவுகள் மாறுபடுபவை
சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தால் ஆணையிடப்பட்டது




**1 ஃபிகர் ஸ்டடி (*Figure Study*, 2012)**

ஃபிகர் ஸ்டடி (2012) என்பது, டானிகுச்சியின் படைப்புப் பயிற்சி முழுவதிலும் காணப்படும் இயற்கைசார் கூறுகளையும் உடல்சார் உழைப்பையும் பிரதிபலிக்கிறது. கருப்பு-வெள்ளைத் திரைப்படம், அடர்ந்த காட்டில் இரண்டு தொழிலாளர்கள் தரையில் ஒரு குழியைத் தோண்டுவதைச் சித்தரிக்கிறது. பல்வேறு கோணங்களில் இருந்து, அந்த இருவரும் குழியிலிருந்து எடுக்கப்பட்ட களிமண்ணால் வெள்ளைப் பைகளை நிரப்புவது காணப்படுகிறது. அவர்களின் கருவிகளின் தொடர்ச்சியான ஒலி, டானிகுச்சியின் மீஸ் *421* (*Mies 421*) என்பதைக் கட்டமைக்கும் டிக்-டிக் என்று ஒலிக்கும் மெட்ரோனோமின் (தாளக் கருவி) சீரான துடிப்புக்கு முரணானதொரு பின்னணியை. அதே சமயம், அவர்கள் பூமியிலிருந்து அகற்றும் களிமண் பைகள், ஃபிகர் ஸ்டடி (2018) என்பதன் மையத்திலுள்ள களிமண் சிற்பத்தை முன்னறிவிக்கின்றன.

**2 ஃபிகர் ஸ்டடி (*Figure Study*, 2018)**

ஃபிகர் ஸ்டடி (2018) என்பது, கதையை விட உருவாக்கும் செயல்முறையில் கவனம் செலுத்துவதன் மூலம், டானிகுச்சியின் திரைப்பட உருவாக்க நுட்பத்தின் முக்கிய அம்சங்களை எடுத்துக்காட்டுகிறது. ஆழ்ந்த செறிவூட்டப்பட்ட சிவப்பு மற்றும் நீல நிறப் படங்கள், ஒரு களிமண் பொருளின் உருவாக்கத்தையும் அதன் இறுதி வடிவத்தையும் ஆவணப்படுத்துகின்றன, அதே சமயம், அப்படங்களின் நெருக்கமான கட்டமைப்பு (tight framing) பார்வையாளர் காண்பதைக் கட்டுப்படுத்துகிறது திரைப்படத்தின் முதல் பகுதியில் காட்டப்படும் தொடர்ச்சியான நிலையான படங்கள், கலைஞரின் கைகளையும் களிமண் உருவம் பெறும்போதான அதன் இயல்பான தன்மையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன; இதன் மூலம், காலப்போக்கில் திரண்டக் கலைசார் உழைப்பின் நுட்பமான தடங்கள் வெளிப்படுகின்றன. இந்த நிலையான படங்கள், முழுமையடைந்த ஒரு பொருளின் முழு நீளத்தையும் தொடர்ந்து காட்டும் ஒரு ஒற்றைக் காட்சியுடன் முரண்படுகின்றன. இருப்பினும், கேமராவின் குறுகிய காட்சிப் பரப்பு, ஒவ்வொரு பகுதியும் அப்பொருளுடன் ஒட்டுமொத்தமாக எவ்வாறு இணைகிறது என்பதை நாம் காண்பதைத் தடுக்கிறது. இந்தச் சைகைகள், கலைஞர் பிலிப்பைன் ஹை ஸ்கூல் ஃபார் தி ஆர்ட்ஸில் (Philippine High School for the Arts) மேற்கொண்ட ஆரம்பகாலப் பொருள் ஆய்வுப் பயிற்சிகளை நினைவூட்டுகின்றன; அங்கு, மாணவர்கள் மனதில் முன் தீர்மானிக்கப்பட்ட முடிவு ஏதுமின்றி வெவ்வேறு பொருட்களைக் கொண்டு பரிசோதனை செய்ய ஊக்குவிக்கப்பட்டனர்.

**3** **மீஸ் *421* (*Mies 421*)**

மீஸ் *421* என்பது, செல்வாக்குமிக்க ஜேர்மன் கட்டிடக்கலைஞர்களான மீஸ் வான் டெர் ரோஹே (Mies van der Rohe) மற்றும் லிலி ரைக் (Lilly Reich) ஆகியோரால் வடிவமைக்கப்பட்ட 1929 ஆம் ஆண்டின் பார்சிலோனா கண்காட்சி மண்டபத்தின் (Barcelona Pavilion) கட்டமைப்பு விவரங்களைப் பதிவுசெய்கிறது. டானிகுச்சியின் திரைப்படம், அந்தக்கட்டிடத்தின் கருப்பு-வெள்ளை நிழற்படங்களைப் பயன்படுத்துகிறது; மெட்ரோனோம் (metronome) கருவியின் துடிப்பு வேகம் அதிகரிக்க அதிகரிக்க அதற்கேற்ப அப்படங்களும் மாறிக்கொண்டே செல்வது, ஒருவிதமான பதற்ற உணர்வை படிப்படியாக உருவாக்குகிறது. தனது காணொளிகளில் உள்ள இந்த நிலைப் படங்களைக் கலைஞர் திடமான “பொருள்கள்” என்றும், அவற்றிற்கு இடையிலான குறுகிய இடைவெளிகளை “எதிர்மறை வெளி” (negative space) என்றும் விவரிக்கிறார். இது அவற்றை அவரது ஓவியங்கள் மற்றும் சிற்பங்களுடன் தொடர்புபடுத்துகிறார். பார்சிலோனாக் கண்காட்சி மண்டபத்தின் குறைந்தபட்ச கோடுகள் மற்றும் பல்வேறு மேற்பரப்பு அமைப்புகளில் டானிகுச்சி செலுத்தும் கவனம், அவரது நன்கு அறியப்பட்ட செங்கல் ஓவியங்களின் கட்டிடக்கலை அளவையும் மேற்பரப்பு மாறுபாடுகளையும் வலியுறுத்துகிறது. அதே நேரத்தில், மீண்டும் மீண்டும் வரும் கூறுகள் ஒரு பெரிய முழுமையின் துண்டுகளாக முன்வைக்கப்படும் ஒரு செயல்முறையை முன்னிலைப்படுத்துகிறது.

**4–9, 11–17** **தலைப்பிடப்படாதது (*Untitled*)**

டானிகுச்சியின் செங்கல் ஓவியங்கள் (2008–தற்போதுவரை) பென்சிலால் வரையப்பட்ட செவ்வகங்களின் சீரான வரிசைகளால் வகைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனியாக நாட்கள் அல்லது வாரங்களுக்கு மேல் வரையப்படுகின்றன. அவற்றின் மேற்பரப்புகளில், நுட்பமான நிற மாற்றங்கள் காலப்போக்கில் திரள்கின்றன. இவை கலைஞரின் படைப்புச் செயல்முறையைப் பிரதிபலிப்பதுடன், உள்நோக்கத்தையும் நீண்ட நேரம் உற்றுநோக்குவதையும் ஊக்குவிக்கின்றன. நவீனத்துவக் கலை வரலாற்றுப் பாரம்பரியத்திற்கு ஒரு திட்டமிட்ட எதிர்வினையாக அமைவதற்குப் பதிலாக, டானிகுச்சியின் கேன்வாஸ் ஓவியங்கள் முழுவதும் மீண்டும் மீண்டும் வரும் செங்கல் போன்ற வடிவியல் பாணி, அவற்றை உருவாக்குவதில் ஈடுபட்ட நேரத்தையும் முயற்சியையும் பிரதிபலிக்கிறது. தலைப்பிடப்படாதது மற்றும் எண்ணிடப்படாத டானிகுச்சியின் செங்கல் ஓவியங்கள், ஒவ்வொரு புதிய ஓவியத்துடனும் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் ஒற்றைக் கலைப்படைப்பின் தனித்தனிப் பகுதிகளாக மிகச் சிறப்பாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. இந்தப் பெரிய கேன்வாஸ் ஓவியங்களைக் காட்சியகச் சுவர்களில் சாய்த்து வைப்பதன் மூலம், டானிகுச்சி ஓவியத்தின் தட்டையான மேற்பரப்பு, கேன்வாஸ் ஒரு முப்பரிமாணச் சிற்பப் பொருளாக மற்றும் அது அமைந்துள்ள கட்டிடக்கலை இடம் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லைகளை மங்கச் செய்கிறார்.

**10** **ஏ பெயிண்டர், இஃப் பிளாக் வெர் ஏ பிளேஸ்**
**(*A painter, if black were a place*)**

டானிகுச்சியின் புதிய திரைப்படமான ஏ பெயிண்டர், இஃப் பிளாக் வெர் ஏ பிளேஸ், சீரான வேகத்தில் நகரும் தொடர்ச்சியான நிலையான படங்களைப் பயன்படுத்தி *Mies 421*–இன் கட்டமைப்பைப் பிரதிபலிக்கிறது. அறியப்படாத ஒளிப்படக் கலைஞரால் எடுக்கப்பட்ட டிஜிட்டல் படங்கள், டெராக்கோட்டா சிற்பங்கள் நிறைந்த ஒரு தோட்டத்தின் நெருக்கமான காட்சிகளைச் சித்தரிக்கின்றன. இந்தப் படங்கள் சூட்சுமையாகவும் நெருக்கமாகவும் உள்ளன. எனினும், அவற்றின் பிக்சலேற்றத் தோற்றம் (pixelated appearance) ஏக்க உணர்வைத் தூண்டுகிறது மற்றும் படிப்படியாக நினைவுகூறுவது கடினமாகிவரும் தனிப்பட்ட நினைவுகளைக் குறிப்பிடுகிறது. கலைஞரின் தாயார், கிறிஸ்டினா “கிட்டி” டானிகுச்சி (Cristina “Kitty” Taniguchi) என்பவரின் பல ஓவியங்கள், இந்தப் படங்களின் வரிசையில் இடம்பெற்றுள்ளன. இது, இளைய டானிகுச்சியின் ரன்அவேஸ் (*Runaways*) சிற்பங்களில் பொருள் பயன்பாட்டைத் தாக்கம் செலுத்தும் தலைமுறை இடையிலான தொடர்புக்கு மீண்டும் கவனத்தைத் திருப்புகிறது. இந்தப் படங்களின் தொடர்ச்சியான ஓட்டம் அவ்வப்போது குறுக்கிடப்படுகிறது; அப்போது தோன்றும் காட்சிகள் முதலில் கருப்புத் திரையைப் போலத் தோன்றினாலும், உற்றுநோக்கும்போது, டானிகுச்சியின் ஓவியங்களைப் போலவே, உன்னிப்பாகப் பார்க்கும்போது நுட்பமான நிற மாற்றங்களையும் வேறுபாடுகளையும் கொண்ட கையால் தீட்டப்பட்ட வண்ணப் பரப்புகளை அவை வெளிப்படுத்துகின்றன.

**18** **ரன்அவேஸ் (*Runaways*)**

டானிகுச்சியின் ரன்அவேஸ் படைப்புகள், முப்பரிமாண வெளியில் ‘வரையப்பட்ட’ வட்டங்கள் மற்றும் நேர்கோடுகளைப் பயன்படுத்தி, சிற்பக் கலையை அதன் மிக அடிப்படையான வடிவங்களுக்குச் சுருக்குகின்றன. தொங்கவிடப்பட்டுள்ள இந்தப் பொருட்கள் ஒரு எளிய காட்சி மொழியை முன்வைக்கின்றன; இது பைனரிக் குறியீட்டின் 1 மற்றும் 0 ஆகிய இலக்கங்களைப் போலவே, முடிவற்ற சாத்தியக்கூறுகளை உணர்த்துகிறது. ஜாவா பிளம் மரங்களின் (பிலிப்பைன்ஸில் துஹாத் என்று அழைக்கப்படுபவை) மரத்தைக் கொண்டு செதுக்கப்பட்ட இச்சிற்பங்கள், கலைஞரின் தாயுடன் ஆழமானத் தனிப்பட்ட பிணைப்பைக் கொண்டுள்ளன; ஏனெனில், கர்ப்பமாக இருந்தபோது அவர் இந்தப்பழத்தை மிகவும் விரும்பியிருந்தார். ஜாவா பிளம் பழத்தின் கருமையான ஊதா நிறம், டானிகுச்சியின் கேன்வாஸ் ஓவியங்களின் ஆழமான நிறங்களைப் பிரதிபலிக்கும் அதே வேளையில், சிற்பங்களில் அவர் துஹாத் மரத்தைப் பயன்படுத்துவது, குறைந்தபட்சக் சிற்பக்கலையின் முன்னிறுத்தப்பட்ட புறநிலைத்தன்மையை நிராகரிக்கிறது. அதற்குப் பதிலாக, அவரது தனிப்பட்ட வரலாற்றின் கூறுகளை இணைத்து, தொழிற்சாலை உற்பத்தியைக் காட்டிலும் கைவினைத்திறனைத் தழுவுகிறது.

இந்த அறைத் தகவல் தாள் மரியா டானிகுச்சியின் கண்காட்சியுடன் இணைந்து வெளியிடப்படுகிறது: ஆஃப்டர்இமேஜ் (Afterimage), சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தால் (Singapore Art Museum – SAM) 24 ஜூலை முதல் 22 நவம்பர் 2026 வரை தஞ்சோங் பகார் டிஸ்ட்ரிபார்க்கில் (Tanjong Pagar Distripark) ஏற்பாடு செய்துள்ள ஒரு கண்காட்சி ஆகும். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், enquiries@singaporeartmuseum.sg என்ற இந்த மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ளவும்.
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. SAM–ஆல் ஜூலை 2026–ல் வெளியிடப்பட்டது. SAM–இன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, இந்த வெளியீட்டில் உள்ள உள்ளடக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மறுபதிப்புச் செய்யக்கூடாது. இந்த அறைத் தகவல் தாளில் உள்ள தகவல்களின் துல்லியத்தை உறுதிசெய்யச் சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், மாற்றங்கள் சில சமயங்களில் தவிர்க்க முடியாதவை; மேலும், கண்காட்சி, அதன் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நுழைவுச்சீட்டு வழங்குதல் கொள்கை ஆகியவற்றில் முன்னறிவிப்பின்றி மாற்றங்களைச் செய்வதற்கான உரிமையை SAM கொண்டுள்ளது. மிகச் சமீபத்திய தகவல்களுக்கு, singaporeartmuseum.sg ஐப் பார்வையிடவும். அச்சிடும் நேரத்தில் அனைத்துத் தகவல்களும் சரியானவை.